1

2

ஏப்ரல், 1929

72
Y31m2,N26
N29.4.2
199379

No 2169 Vol. IV

# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டி[illegible]ர்
ஆபீஸ்: 9, ப்ராடீஸ் ரோட், மைலாப்[illegible]

வால்யூம் IV] பிப்ரவரி 1929 [நெ 2

OFFICE OF THE REGISTRAR OF ... No. ... 12 APR 1929 ... MADRAS

## பொருளடக்கம்



| நெ. | | பக்கம் |
|---|---|---|
| 11. | கிராமாந்தரங்களிற்கு மோடார் வண்டி ஏற்பாட்டால் உண்டாகும் லாபநஷ்டங்கள் | 25 |
| 12. | சாலைகள், ரோட்டுகள், இவைகளை விருத்தி செய்ய விசாரணை சபை | 30 |
| 13. | கொசுக்களும் அவைகளை யொழிப்பதும் | 32 |
| 14. | கிராமப்பஞ்சாயத்துகள் | 33 |
| 15. | கிராமச் சீரமைப்பு விஷயத்தில் கூட்டுறவு ஏற்பாடுகள் | 34 |
| 16. | வியவஸாயக்குறிப்பு | 36 |
| 17. | நான்காவது பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் மகாநாடு | 40 |
| 18. | வர்த்தமானக் குறிப்பு | 45 |
| 19. | பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் லிமிடெட் | 48 |



Annual Subscription (inclusive of Postage)
Inland Rs. 3: Foreign Rs. 4-8-0.
Single copy, Inland As. 6, Foreign As 8.

Rural India reaches the Villages and Town of India
It is the best medium for advertisement.

# SADHANA
# AUSADHALAYA
## DACCA (Bengal)

**—ADHYAKHA—**

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும். வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தை தெரிவித்தால் இனாமாக மருந்துபட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம் (சுவர்ணஸிந்தூரம்)

அசல் தங்கத்துடன் ஒருசேர் ... ரூ 4—0—0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்டமருந்து. பித்தம், வாதம் முதலிய வியாதிகளைப்போக்குவதுடன் ரத்தசுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸரஸா

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3—0—0

சுக்ர ஸஞ்சீவி

இது வீர்யக்குறைவ, அபோகத்தன்மை, சுவப்னஸிகிதம், முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை : சேர் 1க்கு ரூ16—0—0

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும், இடுப்புநோய் முதுகுவலி, கர்ப்பப்பை வியாதி அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16-டோஸ் ரூ. 2· 50-டோஸ் ரூ. 5.

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்

ஆபீஸ் : 9, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

12 APR 1929

வால்யூம் IV.] பிப்ரவரி, 1929 [நெ 2

## கிராமாந்தரங்களிற்கு மோடார்வண்டி ஏற்பாட்டால் உண்டாகும் லாப நஷ்டங்கள்.

[இது சென்னை கவர்மெண்டில் எகனமிக் ஸர்வே ஸ்பெஷல் ஆபீஸராக விருந்த ஆசிரியர் என். ஜீ. ரங்கா, பி.லிட் (ஆக்ஸன்) அவர்களால் எழுதப்பட்டது]

சென்ற 10 வருஷங்களில் நமது மாகாணத்தில் மோடார் வண்டிகள் பிரபலமாக யேற்பட்டு விட்டன. சாலைகளில் பஸ்வண்டிகள் ஓடுகின்றன. அவைகளின் சங்கியை அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஜனங்கள் அவைகளை மேல் மேலும் வேண்டுகிறார்கள். மோடார் ரிபேர் செய்யப்பட்டவர்களும், டிரைவர்களும், கிளீனர்களும், கண்டக்டர்களும், பெட்ரோல் விற்பவர்களும் வேண்டிய மட்டும் அதிகரித்திருக்கிறார்கள். மோடார் வண்டிகளை வைத்துக் கொண்டு ஜீவனம் செய்வதை ஜனங்கள் வெகு உற்சாகத்துடன் கைக்கொண்டிருக்கிறார்கள். மோடார் வண்டிகளை வாங்குவதற்கும் அத்தொழிலை நடத்துவதற்கும் மூலதனம் கஷ்டமில்லாமல் கிடைக்கின்றது. 30 வயதுக்குள்பட்டவர்கள் மோடார் வண்டிசம்பந்தமான தொழில்களை பின்பற்றுகிறார்கள்.

இவ்வண்டிகளை உபயோகிக்கும் கிராம ஜனங்களோ வரும்படியின் நிமித்தமாகவோ, லாபத்தை யுத்தேசித்தோ அவைகளில் பிரயாணம் செய்கிறார்களென்பதில்லை. அவர்கள் விநோதத்திற்காகவே அவைகளை யுபயோகிக்கிறார்கள். முன்காலத்தில் கால்நடையாகவே வெகு தூரப்பிரயாணங்களை கிராமஜனங்கள் மிக சந்தோஷத்துடன் செய்து வந்தனர். பிரயாணத்திற்காக சுவல்ப பணத்தைத்தான் சிலவுசெய்தனர். மோடார் பஸ்ஸுக்கள் ஏற்பட்டபின்பு தொழிலாளிகள் ஏற்கனவே குவிந்துக்கொண்டு ஜீவனத்திற்கு கஷ்டப்பட்டு

கொண்டிருந்த இடங்களிலிருந்து வேறுஸ்தலங்களுக்கு நகர்ந்தார் என்பது மில்லை. மோடார் பஸ்களைஉபயோகிப்பதால் ஜனங்களுக்கு அதிக திரவ்வியச்சிலவுதான் ஏற்படுகிறது.

கிராமங்களில் ஜனங்களிற்கு அதிக வரும்படி யேற்படுவதற்கு சௌகரியங்கள் குறைவாயிருக்கின்றன. மேலும் ஜனத்தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது. மோடார்பஸ்ஸுக்கள் அவசியமில்லாத செலவையுண்டுபண்ணி கிராமங்களின் தரித்திர நிலையை யதிகரிக்கின்றன வென்பது நன்கு விளங்கும்.

ஜனங்களின் வலிமை, சரியான புஷ்டிகொடுக்கக்கூடிய உணவுகளை புஜிக்கக்கூடாமையாலும், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை மதுபானம் முதலியவைகள் யுட்கொள்ளப் படுவதாலும் குறைந்து போகிறபடியால் மோடார் சவாரியின் நிமித்தம் அவர்கள் செலவிடுகிற பணங்களை நல்ல உணவுகளை அடைகிற நிமித்தம் அவர்கள் உபயோகித்தல் நலம்.

1923–24ல் நமது மாகாணத்தில் 9000 மோடார் வண்டிகளிருந்தன. இப்பொழுது சற்றேறக்குறைய 24000 வண்டிகளிருக்கின்றன. கோயம்புத்தூர் ஜில்லாவில் 1923–24ல் 94 வண்டிகளிருந்தன. இப்பொழுது 276 இருக்கின்றன. இச்சங்கியைகள் மோடார் வண்டிகள் அதிகரித்து வருகிற வேகத்தை நிரூபிக்கின்றன. சராசரியில் இந்திய ஜனத்தொகையில் நபர் ஒருவருக்கு மோடார் வண்டிகளினால் செலவு 1½ அணாவாக ஏற்படுகிறது.

1922–23ல் நம்முடைய தேசத்தில் இறக்குமதியான மோடார் வண்டிகள் அவைகளைச்சேர்ந்த சாமான்கள், இவைகளின் கிரயத்தொகை 1 கோடி 38 லக்ஷ ரூபாய்கள். இத்தொகையில் நம்முடைய மாகாணத்தின் பாகம் 48 லக்ஷ ரூபாய்கள். இப்பொழுது இந்தியா முழுமைக்கும் கிட்ட தட்ட 3 கோடி ரூபாய்கள் மொத்தக் கிரயமுள்ள மோடார் வண்டிகளும் சாமான்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதில் நம்முடைய மாஹாணத்தைப் பற்றின பாகம் 70 லக்ஷம் ரூபாய்.

மோடார் வண்டியை ஓட்டுகிற தொழிலை ஜனங்கள் அதிவேகமாய் கற்கிறார்கள். குண்டூர் ஜில்லாவில் 1921-ம் வருஷத்தில் 97

199379



பெயர்கள்தான் டிரைவர் லைசென்ஸுகளைப் பெற்றிருந்தார்கள். இப்பொழுது 300 பெயர்களிருக்கிறார்கள்.

சென்னை மாஹாணத்தில் ஜில்லா போர்ட்டுகள் மேற்சொல்லிய லைசென்சுகளிலிருந்து 7 லக்ஷம் ரூபாய்களை வசூலிக்கின்றன. டோல் கேட்டுகளிலிருந்து அந்தபோர்ட்டுகளுக்கு ஏற்படும் வரும்படிகளின் மூன்றிலொரு பாகம் மோட்டார்வண்டிகளிலிருந்து வசூலிக்கப்பட்ட பணம்தான்.

நடுத்திற வகுப்பு ஜனங்கள்தான் மோடார் பஸ்களைவைத்து நடத்துகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் 5000 ரூபாய்க்கு மேல்பட்ட மூலதனத்தை இத்தொழிலில் பிரயோகிக்கிறதில்லை. மோடார் வர்த்தகர்கள் மாதத்தவணை ஏற்பாட்டில் வண்டிகளை விற்கிறபடியால் கொஞ்சதிரவியத்தையுடையவர்கள் கூட மோடார் பஸ்ஸுகளை வாங்கி சர்விஸுகளை நடத்துகிறார்கள். ஆனபோதிலும், இப்படிப்பட்டவர்களின் சங்கியை மிகவும் குறைவுதான். நடுத்திற வகுப்பைச்சேர்ந்த இதர ஜாதியங்களையுடைத்தான பிராம்மணரல்லாதவர்கள்தான் மூலதனத்தைக்கொண்டு மோட்டார் பஸ்ஸுகளை வாங்கி ஸர்விசுகளை நடத்துகிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவில் 230 பஸ்ஸுகள் வேலை செய்கின்றன. இவைகளில் 165 பஸ்ஸுகள் பிராம்மணரல்லாதவர்களால் நடத்தப்படுகின்றன.

அநேகம் பெயர்கள் முதல் முதலில் கண்டக்டர்களாகவோ, டிரைவர்களாகவோ கொஞ்சகாலம் வேலைசெய்து, கொஞ்சம் மூலதனத்தைச் சேர்த்துக்கொண்டு, சொந்தமாக பஸ்ஸுகளை வாங்கிக் கொண்டு ஸர்விஸுகளை நடத்துகிறார்கள்.

1920–ம் வருஷத்தில் பஸ்டிரைவர்களின் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50ம் சாப்பாடுமாகவிருந்தது. கண்டக்டர்களின் சம்பளமும் ரூ. 30ம் சாப்பாடுமாக விருந்தது. இப்பொழுது டிரைவர்களின் சம்பளம் ரூ. 30க்கு மேல் இல்லை; கண்டக்டர்களின் சம்பளம் ரூ. 20க்கு மேல் இல்லை. சம்பளங்கள் குறைந்துவிட்டபோதிலும் ஜனங்கள் இவ்வுத்தியோகங்களிலேயே ஆசையையுடைத்தாயிருக்கிறார்கள்.

இந்தத்தொழில் இங்கிலீஷ் வாசித்தவர்களால்கூட ஆவலுடன் பின்பற்றப்பட்டு வருகிறதென்பதே இந்தியர்கள் தேசப்பிரயாசை

யுள்ள வேலைகளை கைக்கொள்ள விரும்புகிறதில்லையென்கிற அபவாதத்திற்குத்தக்க எதிர்வாதமாகிறது.

பெட்ரோல்விற்கிறவர்களின் சங்கியை கிரோஸின் எண்ணைவிற்பவர்களின் சங்கியையைவிட அதிகரித்துவருகிறது.

ஒவ்வொரு ஜில்லாவிலும் மோடார்கார் வியாபாரக் கம்பெனிகளின் ஏஜண்டுகளிருக்கிறார்கள். ஒவ்வொருஏஜண்டின்கீழ் அநேகஸப் ஏஜண்டுகள் இருக்கிறார்கள். மோட்டார்கார் ஏஜண்டுகளும் ஸப் ஏஜண்டுகளும் பெட்ரோல் விற்பனை ஏஜண்டுகளாகவுமிருக்கிறார்கள், மேலும், அவர்கள் மோட்டார் வண்டிகளையும் பஸ்களையும் அவர்களுடைய சிப்பந்திகளைக்கொண்டே ஓட்டி ஸர்விஸ்களையும் நடத்துகிறார்கள். இவ்விதமாக எல்லாசௌகரியங்களுடனும் தங்களுடைய ஏஜன்ஸி சிப்பந்திகளைக்கொண்டே எல்லாவேலைகளையும் அவர்கள் நடத்துகிறபடியால் அவர்கள் அளவில்லாத லாபங்களையடைகிறார்கள். இவர்கள் மோடார்வண்டிகளின் ரிப்பேர்களையும் செய்கிறார்கள்.

கிராமங்களில் ஜனங்கள் பெட்ரோல் விற்பதிலும், மோட்டார் தச்சுவேலை கொல்லவேலைகளிலும் பஸ் ஓட்டுவதிலும் அமர்ந்துவிடுகிறபடியால் வியாபாரத்திற்கு ஊழியர்கள் அகப்படுகிறதில்லை.

மோடார்பஸ் தொழிலால், ஆதியில் அநேக பெயர்கள் மிகுந்த லாபங்களையடைந்தார்கள். வரவர பஸ் ஸர்விஸ்க்காரர்கள் அதிகரித்துவிட்டார்கள். போட்டிகள் ஏற்பட்டு விட்டன. இக்காரணங்களினால் சுவல்ப மூலதன பஸ்க்காரர்கள் ஸர்விஸுகளை நிறுத்த வேண்டியதாய் நேரிட்டு விட்டது. ஸர்விஸை நிறுத்தினவர்கள் பஸ் டிரைவர்களாகவும் கண்டக்டர்களாகவும் உத்தியோகம் செய்கிறார்கள்.

டிரைவர்களாகவும் கண்டக்டர்களாகவும் வேலை செய்துவிட்டுப் பணத்தை சேர்த்துக்கொண்டு பஸ்ஸுகளை வாங்கித்தாங்களே ஓட்டி ஸர்விஸை நடத்துகிறவர்கள் வண்டிகளின் கிரயக்கடன் தொகை அடைகிற வரையில் மாதக்கட்டணங்களைச் செலுத்தவும் தங்களுடைய யோகக்ஷேமங்களை நடத்தவும் போதுமான வரும்படியை சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள் கடன் பூர்த்தியாக அடைந்த பிறகு அவர்கள் வருமானத்தை வெகு அஜாக்கிரதையாகச் செலவிடுகிறார்கள். அவர்கள் அதிக சரீரகஷ்டத்துடன் சம்பாதித்த பணத்தை மீத்திவைத்துக்கொண்டு தங்களுடைய சுகஸ்திதியையுயர்த்த முயலுகிறதில்லை.



சரீரத்தையும் கேவலஸ்திதிக்குக் கொண்டுவந்து பலமில்லாமலும் பஸ்கள் பழுதாகி விட்டபின் பணமில்லாமல் புதிய பஸ்களை வாங்கக்கூடாமலும் வேறு தொழில்களை யநுஷ்டிக்க முடியாமலும் ஜீவனத்திற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டும் தரித்திர நிலையை அடைகிறார்கள்.

ஜில்லாக்களில் ரஸ்தாக்களும் சாலைகளும் அதிகாரிகளால் கவனிக்கப்படுகிறதில்லை அவைகள் குறுகலாகவும் மண் சாலைகளுமாகவுமே இருக்கின்றன. மோடார்களும் மாட்டுவண்டிகளும் அவைகளில் மோதிக்கொண்டு செல்கின்றன. மோடார்கள் மாட்டு வண்டிகளை மோதிக்கீழேதள்ளி விடுகின்றன. ஜில்லா மோட்டார்கள் லைசென்ஸுகளின் மூலமாகவும் டோல் கேட்டுகளிலிருந்தும் கணக்கிடக் கூடாத பணங்களை அடைகிறார்கள். மோடார்கார்களிலிருந்து இவைகளின் பெரும்பாகம் அடையப்படுகிறது. இந்தப்பணங்களை ரஸ்தாக்களின் நிமித்தம் செலவு செய்யாமல் இதரவழிகளில் செலவு செய்கிறார்கள். மோடார்களுக்குச் சொல்லமுடியாத சேதங்கள் உண்டாகின்றன. மாட்டு வண்டிகள் கிராமங்களின் தான்யங்களை சுமந்துகொண்டு போகிறபடியால் அவைகளுக்கு உண்டாகும் சேதங்களும் கிராமக்காரச் செல்வநிலையை பாதிக்கின்றன.

மோடார் பஸ்களின் சௌகரியத்தினால் கிராமஜனங்களுள் தரிவேலை செய்பவர்கள் பலவிடங்களிற்குச்சென்று நெய்தவஸ்திரங்களை தக்கவிலைகளுக்கு விற்கிறார்கள். தான்ய விலை வாசிகளை கிராமத்தார் பலவிடங்களிற்குச்சென்று தெரிந்துகொள்கிறார்கள். சாமான்களை பலவூர்களிலுள்ள பள்ளிக்கூடங்களிற்கும், கோர்ட்டு கச்சேரிகளுக்கும், மார்கெட்டுகளுக்கும் விற்கக்கொண்டுபோகிறார்கள். நம்முடைய சிறுவர்களுள் அநேகருக்கு உத்தியோகம் ஏற்படுகிறது. ஆனால்மோடார் பஸ்கள் காய், கறி முதலியவைகளை ஏற்றிக்கொண்டுபோக இன்னமும் ஆரம்பிக்கவில்லை. மோட்டார் வண்டிகளால் சொல்லமுடியாத உயிர்ச்சேதங்களும் பொருள்சேதங்களும் உண்டாகின்றன. நம்முடைய தேசத்தில் கால்வாய் பிரயாணவசதிகளும் ரோட்டுவசதிகளும்மேல் மேலும் ஏற்பட்டால் உள்நாட்டுவியாபாரமும் கிராமச்செல்வநிலையும் உயரும். நம்முடைய தேசத்தில் அதிகச் செல்வவிருத்தி ஏற்படுவதற்கு யாதொரு முகாந்திரமுமில்லை. வியவஸாயம் ஒன்றிலிருந்தே

தான் செல்வம் ஏற்படுகிறது. அப்படி ஏற்படும் செல்வமும் ஜனங்களுக்கு ஜீவனத்திற்குப்போதுமான அளவில் ஏற்படுகிறதில்லை. மோட்டார் பஸ்கள் தான்யங்களை ஒரு வரிலிருந்து ஒருவருக்கு கொண்டுபோவதற்காகவேயிருந்தால் போதுமானது. ஜனங்கள் தற்போது மோட்டார்களை பெரும்பாலும் விநோதத்திற்காகவும், அனாவசிய சவாரிக்காகவும் உபயோகிக்கிறார்கள். தேசத்தில் பல ஜனங்களுக்கு வயிற்றுக்குச் சாப்பிடக்கூடப்போதுமான வரும்படி ஏற்படாமலிருக்கையில் மோடார் சவாரிச்செலவினால் தரித்திர நிலை பல மடங்கு அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஆகவே மோட்டார் கார்களின் சம்பந்தமாய் கவர்மெண்டார் வரிகளை விதித்து அவைகளின் இறக்குமதியைக்குறைக்க வேண்டும். பஸ்களைக் குறைக்க வேண்டும். டோல்கேட்டுகளிலிருந்து வசூலிக்கப்பட்ட பணங்கள் ரோட்டுகளை அதிகப்படுத்துவதிலும், ரிபேர் செய்வதிலும் உபயோகிக்கப்பட வேண்டும்.

## சாலைகள், ரோட்டுகள், இவைகளை விருத்திசெய்ய வேண்டிய நிமித்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிற விசாரணை சபை.

(ஸ்ரீமான் கே. ஸ்ரீனிவாசன் பி.ஏ. அவர்களால் எழுதப்பட்டது).

நமது தேசத்தில் உள் பிரதேசங்களில் ஞானமும் நாகரீகமும், வியாபாரமும் ஓங்குவதற்கு சாலைகளும் இதரப்பிரயாண மார்க்கங்களும் முக்கியமானவை. பெரியசாலைகளிருப்பதோடு அவைகளோடு கிராமங்களைத் தொடுகிறகிளை ரோட்டுகளும், பாட்டைகளும் நன்றாய் அமையவேண்டும். அவைகள் பிரயாணிவண்டிகளும், சாமான்வண்டிகளும் கஷ்டமில்லாமல் செல்லும்படியான நிலையில் எப்பொழுதும் இருக்க வேண்டும். அப்படி அவைகள் அமைந்து பாதுகாக்கப்பட்டாலொழிய கிராமங்களிலிருந்து விளையும் தான்யங்கள் வியாபாரத்தின் பொருட்டு அந்நியப்பிரதேசங்களுக்குக் கொண்டுபோகப்படுவது சாத்தியப்படாது. கிராம ஜனங்கள் தங்களுடைய சொந்த கிராமங்களிலிருந்து அந்நியப்பிர தேசங்களுக்குச் செல்வதும் கஷ்ட சாத்தியமாகவிருக்கும்.

சாலைகளையும், கிளை ரோட்டுகளையும் விருத்தி செய்ய வேண்டியதற்காக ரோட்டு கமிட்டி என்ற கமிட்டி ஒன்றை கவர்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இக்கமிட்டி வியாபாரம் உள்நாட்டில்



கிராமப்பிர தேசங்களில் எந்தெந்த இடங்களில் அதிகமாகிக்கொண்டு வருகிறதோ அந்தந்த இடங்களைக் கவனித்து அவைகளுக்கு இவ்விதச் சௌகரியங்களை யேற்படுத்த முயலுகிறது. ஆனபோதிலும் இக்கமிட்டியின் பிரயாசைகள் பணக்கஷ்டத்தினால் வீண்போகின்றன. இராஜ்யத்தின் பொதுச்செலவு திட்டத்திலிருந்து ரெயில்வே திட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ரெயில்வே போர்டு என்கிற சபைரெயில் வேக்களை அதிகரிக்கவேண்டிய நோக்கமாய் ஏற்படுத்தப்பட்டு வேலை செய்கிறது. அது ரெயில்வே சார்ஜு விஷயங்களையும் வியாபாரத்துக்குச் சாதகங்களையும் உண்டாக்க முயலுகிறது. தூரப் பிரதேசங்களுக்கு பளுவானமான சாமான்களை வஹித்துக் கொண்டு போவதற்கு ரெயில்வேதான் வேண்டியதாகவிருக்கிறது. மோடார் பஸ்கள் ஏற்பட்டு பிரயாணிகளை வஹித்துக்கொண்டு போகிறபடியால் முன்னே ரெயில்வேயிக்கு பிரயாணிகளால் வந்த வரும்படி குறைவையடைகிறது. இவ்விதக்குறைவு ஏற்படாதபடியிருக்கவேண்டிய நோக்கம் கொண்டு கவர்மெண்டார் ரெயில்வே ஸ்டேஷன்களுக்கு வெகு தூரத்திலிருக்கிற கிராமங்களை அவைகளோடு தொடுத்து அவ்விதமாக கிராமங்களில் உற்பத்தியாகும் தான்யங்கள் ரெயில்வே மூலமாக அந்நியப்பிரதேசங்களுக்கு வியாபாரத்திற்குச் செல்லுமாறுச் செய்விக்க முயலுகிறார்கள்.

பெரிய சாலைகளைக் கூடப்பழுதுபார்த்து நல்ல ஸ்திதியில் வைத்துக்கொள்ள லோகல் போர்டுகளுக்குப் பணம் கிடையாது. ஆகையால் கவர்மெண்டார் டோல் கேட்டுகளையே அடியோடே எடுத்து விட்டு பெட்ரோல் வரி என்ற ஒரு சுவல்ப வரியை விதித்து சாலைகளைத் நற்ஸ்திதியில் வைக்க உத்தேசித்திருக்கிறார்கள். மோடார் வண்டிகள் இனி வெகுதூர சவாரிகளை டோல்கேட்டு ஸங்கடங்களில்லாமலும் கஷ்டமில்லாமலும் ஸவாரி செய்யக்கூடும்.

இனிலோகல் போர்ட்டுகளுக்கு சாலைகளின் சம்பந்தமாய் வேலைகளை இல்லாமல் போகுமாதலால் அவைகள் கிளை ரோட்டுகளை யுண்டாக்கிக் கிராமங்களை சாலைகளோடு தொடுக்கிற வேலையை நடத்தலாம்.

ரெயில் வேக்களை யுண்டாக்குவதிலும், சாலைகள், ரஸ்தாக்கள், பாதைகள், இவைகளை உண்டாக்குவதிலும் கவர்மெண்டார் தேசாபிவிருத்தியை நோக்கமாக வஹிக்கவேண்டும்

## கொசுக்களும், அவைகளை யொழிப்பதும்

[டாக்டர் எம. எஸ் கிருஷ்ணமூர்த்தி ஐயர் எம். பி., ஸி. எம். எப்; ஆர். ஐ. பீ எச். அவர்களால் எழுதப்பட்டது]

சென்னையில் கொசுக்கள் விருத்தியாகிக் கொண்டிருக்கின்றன வென்பதை எல்லோரும் அறிவார்கள். பலவிதநோய்களும் அங்கே உண்டாகின்றன வென்பதையும் அவர்கள் அப்படிப்போலவே அறிவார்கள். நோய் விவரக்கணக்குகள் சென்னைக் கார்பொரேஷனில் சரிவரத்தயாரிக்கப் படுகிறதில்லை. பிரதி டிவிஷனில் உள்ள டிஸ்பன்ஸரியிலும் இவ்விவரக்கணக்கு சரிவரத்தயாரிக்கப் படவேண்டிய தென்பதை சென்னைக் கார்பொரேஷனார் அறியவேண்டும்.

பலவித விஷஜுரங்களும், யானைக்கால், பீஜம் முதலியவைகளும் இதரநோய்களும் கொசுக்களினாலேயே பரவப்படுகின்றன. கொசுக்களை யொழிக்க வேண்டுமானால் அவைகளின் அபிவிருத்தி இடங்கள் கவனிக்கப் படவேண்டும். சென்னையில் கூவமும், பக்கிங்காம் கால்வாயும் தான் கொசுக்களின் அபிவிருத்திக்கு மூலங்கள். அவைகளை சுத்தமாக வைத்துக்கொள்வது முடியாத விஷயமாகும் பக்ஷத்தில் அவைகளைச் சென்னைக்குள்ளே வரவிடாமல் திருப்பிவிட வேண்டும். இவ்வேலையில் பணச்சிலவுகளைப் பார்க்கக்கூடாது. அவைகளாலேற்படும் நோய்களினால் ஜனச்சேதம் கணக்கில்லாமல் உண்டாகிக் கொண்டிருக்கிறது. மைலாப்பூர் போன்ற இடங்களில் இந்தியப்பிரமுகர்களின் பங்களாக்களின் நிலைமையும் கொசுக்களின் அபிவிருத்திக்குக் காரணமாக விருக்கிறது. இந்திய கனவான்களின் பங்களாக்களில் தோட்டங்கள் முள் காடுகளைப்போல் வைக்கப்பட்டிருப்பதை யாவரும் கவனிப்பார்கள். ஐரோப்பியர்களைப்போல் அவர்கள் தோட்ட ஒழுங்கைக் கவனிக்கிறதில்லை. செடிகள், மரங்கள் இவைகளில் பட்டுப்போன பாகங்களை வெட்டுகிற தில்லை. தோட்டங்கள் குப்பைநிறைந்தும், பலவித அசுத்தங்களோடுமிருக்கின்றன. சிலர் பங்களாக்களிலிருந்து அதிக லாபங்களை அடைய வேண்டிய நோக்கங்கொண்டு அதில் கொஞ்சம் கூட காலி நிலத்தை வைக்காமல் காய் கறிச் செடிகளை வைத்து வளர்க்கிறார்கள். பேருக்கு மாத்திரம் பங்களா வென்கிற சிறிய கட்டிடங்களில் தாங்கக் கூடாதபடி அதிக ஜனங்களோடு வஸிக்கிறார்கள். அழுக்குத்துணிகளையும், அசுத்தங்களையும் நிறப்பிக்கொண்டு பங்களாவில் வஸிக்கிறோமென்கிற பெருமையை வஹித்துக்கொண்டுமிருக்கிறார்கள். இன்னும், அதிக வாடகையுத்தேசத்துடன் இருக்கப்பட்டவர்கள், சுவல்பஇடத்திலும் அவுட் ஹவுஸ்கள் என்கிற தனிவஸதிகளைக்கட்டிகுடித்தனங்களுக்கு வாடகைக்கு விடுகிறார்கள். இவ்விதச் சீர்கேடுகள் கொசுக்களை விருத்திசெய்து வியாதிகளையுண்டாக்குகின்றன. சென்னைக் கார்பொரேஷனார் இவைகளைக்கவனித்துச்சீர்முறைகளைக்கைக்கொள்ளவேண்டும்.



சிறியவீடுகளில் மாட்டுக்கொட்டில்கள் அமைக்கப்பட்டு மாடுகள் கட்டப்படுகின்றன. கொட்டில்களில் மூத்திரம் முதலியவை தேங்கியிருந்துகொண்டிருப்பது கொசுக்களை விருத்திசெய்கின்றது. உரல்கள் முற்றங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் மழைஜலம் தேங்குவதாலும் கொசுக்கள் அடைகின்றன. இவ்விஷயங்களில் ஜனங்கள் அடிக்கடி போதிக்கப்படவேண்டும். மேலும் பள்ளிக்கூடங்களில் சிறுவர்களும் சிறுமிகளும் சுகாதார விஷயங்களில் சுகாதாரக்கல்வி பெற்ற டாக்டர்களால் போதிக்கப்பட வேண்டும்.

## கிராமப் பஞ்சாயத்துகள்.

பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜனரல் அவர்களுடைய 1927-28 வருஷத்திற்கான ரிபோர்டைப்பார்வையிட்டோம். பஞ்சாயத்துகள் திருப்திகரமாக வேலைசெய்திருக்கின்றன வென்பதைப்பற்றிநாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். அநேகமான பஞ்சாயத்துகள் கிராமச் சாலைகளிலும் தெருக்களிலும் விளக்குகளைப் போடுகின்றன; மல நிவர்த்திஸ்தலங்களை சுத்தப்படுத்துகின்றன; சப்பாத்திகள்ளிகளையும் இதர முட்காடுகளையும் அழித்து ரோட்டுகளையும் பாதைகளையும் சரியான நிலையில்வைக்கின்றன; குடிமராமத்து வேலைகளையும் நீர்பாசனவேலையையும் அனுஷ்டிக்கின்றன, சில பஞ்சாயத்துகள் பள்ளிக்கூடங்களையும் கிரந்த சாலைகளையும் வைத்திருக்கின்றன. ரிஜிஸ்டிரார் ஜனரல் அவர்கள் பஞ்சாயத்துகளின் முயற்சிகளை பற்றி வெகு திருப்தியாக மொழிந்திருக்கிறார். ஏற்கனவே எந்தெந்த கிராமங்களில் கோயில் திருவிழாக்கள் வாய்க்கால் மராமத்து பயிர் ரக்ஷணை இவைகள் பொது ஏற்பாட்டில் நடைபெருகின்றனவோ

அந்த கிராமங்களிலெல்லாம் பஞ்சாயத்துக்கள் வெகு மேன்மையாக வேலைசெய்கின்றனவென்றும் கூறியிருக்கிறார். பழயகாலப் பஞ்சாயத்துகளின் உணர்ச்சிகளும் அடையாளங்களும் கிராமங்களில்காணப்படுகின்றன. ஆகையால் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்துவது கஷ்டவேலையன்று. கவர்மெண்டாருக்குப் பணம் கிராமங்களிலிருந்து வரி மூலமாக ஏற்படுகிறதாகையால் அவர்கள் பஞ்சாயத்துகளுக்கு அந்தப்பணத்தில் ஒருபாகத்தைக்கொடுக்கவேண்டும். கிராமப் பஞ்சாயத்தென்றும், காட்டுப்பஞ்சாயத்தென்றும், நீர்பாசன பஞ்சாயத்தென்றும் வகுப்பு வகுப்பாகப் பஞ்சாயத்துக்களை உண்டாக்கக்கூடாது. அப்படி அவைகளை உண்டாக்குவது ஒருவகுப்புப் பஞ்சாயத்துக்கும் மற்றொன்றுக்கும் சண்டைச்சச்சரவுகளை விளைக்கிறது. கிராமப்பஞ்சாயத்தென்று ஒரே பஞ்சாயத்து கிராமங்களிலிருந்து பலதுறைகளில் வேலை செய்யவேண்டும். இவ்வித ஏற்பாட்டை கவர்மெண்டார் சீக்கிரத்தில் கைக்கொள்ளவேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக்கொள்வோம். மேலும் ரெவினியூ உத்தியோகஸ்தர்களுக்கு அவகாசமில்லை. ஆதலாலும் அவர்களுக்கு ஏற்கனவே தாங்கமுடியாத வேலையிருப்பதாலும் பஞ்சாயத்து நிர்வாகத்தை அவர்களுக்கு கொடுக்கக்கூடாது.

## கிராமச் சீரமைப்பு விஷயத்தில் கூட்டுறவு ஏற்பாடுகளின் உபயோகம்.

முன் காலத்தில் இந்திய கிராமங்களில் ஜனங்கள் சமூக உணர்ச்சியை வஹித்துக்கொண்டு வாழ்ந்தார்கள் ; சமூகத்திற்கு க்ஷேமம் இருந்தால்தான் பிரதிநபரும் சுகவாழ்வில் இருக்கக்கூடுமென்கிற உணற்சி அவர்களிடத்திலிருந்தது. கிராம ஜனங்கள் வகுப்புக்களாகப் பிரிந்து ஒவ்வொரு வகுப்பும் ஒவ்வொரு தொழிலையநுசரித்து வந்தது. வியவசாயிகள் வியவசாயத்தை அநுஷ்டித்து கிராமத்திற்கு வேண்டிய உணவுப்பொருள்களை விளைத்தார்கள். கொல்லன், தச்சன், கருமான், தட்டான், வாணியன், பரிஹாரி வண்ணான், வெட்டியான், சக்கிலி, இவர்களும் கோயில் பூஜாரிகளும், வைத்தியர் ஜோசியர், உபாத்தியாயர்களுமிருந்துகொண்டு கிராமசமூகத்திற்கு உழைத்தார்கள். கிராம ஜனங்களுக்கு ஒருவிதக்குறைவுமில்லாமலிருந்தது. அவர்கள் ஒருவிஷயத்திற்கும் தங்களுடைய கிராமங்களை



விட்டுப்போகவேண்டியதாக விருக்கவேயில்லை. யோகக்ஷேமத்திற்கு வேண்டிய பொருள்களெல்லாம் கிராமங்களிலேயே உண்டாக்கப்பட்டன. உற்சவங்களும், சந்தைகளும், கிராமக்கூத்துகளும், நாடகங்களும் அவர்களுக்கு இன்பத்தைக்கொடுத்தன. இன்னும் சங்கீத வித்துவான்களும் மேளக்காரர்களும் பரதநாட்டியத்தை ஜீவனமாக வைத்துக்கொண்டிருந்த நாட்டிய ஸ்திரீகளும் இருந்தார்கள். மேற்சொல்லியவர்கள் எல்லோரும் கிராம உற்பத்தியிலிருந்தே வரும்படிகளைப்பெற்று ஜீவித்தார்கள். இவ்விதமாகவே, தென் இந்தியாவில் பிரதிகிராமமும் வாழ்ந்தது. அப்படி அவைகள் வாழ்ந்தமையால்தான் கிராமங்களில் இன்னும் தொழில் நிபுணர்களிருந்துவருகிறார்கள். கிராமத்தவர்கள் கூட்டுறவு வழிகளை திறமாக அப்பியஸித்து வந்தமையால்தான் மேற்சொல்லியபடி அவர்கள் சுகமாக வாழ்ந்தார்களென நன்குவிளங்கும்.

தற்காலத்தில் இந்திய கிராமமென்றால் 10, 15 வீடுகளுள்ள ஒருஸ்தலம். அவைகளில் வாஸம்செய்யும் ஜனங்களுக்கு கிராம சமூக உணர்ச்சியே கிடையாது. கிராம வியவசாய விஷயங்களில் அவர்கள் ஒன்றுசேர்ந்து செய்கிறதில்லை. கிராமத்தில் ஒவ்வொருவரும் அவரவருக்கே என்கிற உணர்ச்சியோடு வசிக்கிறார்கள். கிராமத்தொழிலாளிகள் ஆதரிக்கப்படுகிறதில்லை. கிராமத்தின் செல்வநிலையை உயர்த்தவேண்டுமென்கிற நோக்கமே அவர்களுக்கு இல்லை. தங்களுடைய கிராமத்தின்பேரில் ஆசையை வஹிக்கிறதில்லை. கிராமங்களில் சமூகவழிகளே அழிந்துபோய்விட்டன. ஆகவே, கிராமங்கள் செல்வமற்றும், சுகமற்றும் துக்க ஸாகரங்களாகக் கிடக்கின்றன. கிராமங்கள் பண்டைகாலங்களில்போல் நன்றாய் அமையவேண்டுமானால் அவைகளில் கூட்டுறவு வழிகள் அமைக்கப்படவேண்டும்.

நம்முடைய தேசத்தில் கூட்டுறவு இயக்கம் நன்றாய் பரவியிருந்தபோதிலும் செல்வ விருத்தியானது மண்வளத்தின் க்ஷீணத்தினாலும் கிராமங்களில் ஜனங்கள் ஐக்கியவழிகளை அநுஸரிக்காமல் அவரவர் அவருக்கே என்கிற மனத்தோடு இருந்து ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொண்டிருப்பதாலும், சமூகவாழ்வை நாடாமலிருப்பதாலும் மேலுக்குமேல் க்ஷீணித்துப்போகிறது. கிராமங்களில் கூட்டுறவு சங்கங்களேற்பட்டு வியவசாயத்தையும் தொழில்களையும்

சரியான நிலையில் அமைக்கவேண்டும் ; சுகாதாரக்குறைவுகளைக் கவனித்துச் சீர்செய்யவேண்டும் ; வியாஜ்ஜியவழக்குகளைப் பஞ்சாயத்து மூலமாகத்தீர்த்துக்கொள்வதை ஏற்படுத்தவேண்டும். இப்படி கிராமங்களில் சீர்முறைகள் ஏற்படுத்தப்படவேண்டியநிமித்தம் ஊழியர்கள் கூட்டுறவு இலாகாவின் மூலமாகத் தயாரிக்கப்படவேண்டும். கல்வி, வியவசாய, தொழில், பாரெஸ்டு, சுகாதார இலாகாக்கள் கூட்டுறவு இலாகாவோடு இதுவிஷயமாய் ஒத்துழைத்துப் பாடுபட்டு வேண்டிய அளவில் ஒத்தாசைகளைச் செய்யவேண்டும். கூட்டுறவு இலாகாவோடு கிராமப்பள்ளிக்கூடங்களை சம்பந்தப்படுத்தவேண்டும். கிராமப்பள்ளிக்கூடங்கள் கிராம வாழ்வு மேற்சொல்லியபடி அமையவேண்டியநிமித்தம் போதனைகளை யநுஷ்டிக்கவேண்டும்.

## வியவஸாயக் குறிப்புகள்

பெல்ஜியம் நாட்டில் ஒரு ஏகருக்கு 1200 பக்காப்படி கோதுமை விளைகிறதாம். அந்நாட்டில் சதுரமைல் ஒன்றுக்குச் சராசரியில் 600 பேர் இருக்கிறார்கள். அத்தனை பெயர்களுக்கும் உணவு அந்நாட்டில் விளைக்கப்படுகிறது.

x x x x x

அமெரிக்காவில் ஏகரா ஒன்றுக்கு உருளைக்கிழங்கு விளைச்சல் 3000 மணங்குகளாக விருக்கின்றன. அதாவது நமது தேசவிலைப் பிரகாரம் 3000 ரூபாயாகிறது.

x x x x x

பொன்சு என்னும் ஒரு பிரெஞ்சு தோட்டக்காரன் 2¾ ஏகரா நிலத்தில் 800 மணங்கு காரோத்தையும், 800 மணங்கு வெங்காயம், 6000 முட்டை கோஸ், 3000 காலிபிளவர் 5000 கூடைத்தக்காளிப் பழம் இன்னும் அநேகவித சாகங்களையும் விளைத்துவந்தானும். இவனைப்போலவே அநேக தோட்டக்காரர்களும் அம்மாதிரியே விளைச்சல்களையுண்டுபண்ணிவந்தார்களாம்.

x x x x x

இங்கிலாந்திற்குச் சொந்தமான ஒரு பிரஞ்சுத்தீவில் பூமி பாறை நிறைந்ததாயிருக்கிறது. 10,000 ஏகராக்கள்தான் பயிர் செய்யப்படுகின்றன. ஏறக்குறைய 25 லக்ஷம் பவுன் மதிப்புள்ள



பழங்களும் சாகங்களும் விளைக்கப்பட்டு இங்கிலாந்திற்கும் இதர நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

x x x x x

பிரஞ்சு வேளாளர் பூமிக்கு அடியில் குழாய்களைப் போட்டு அவைகளை வெந்நீரால் நிரப்பிப்பூமியை உஷ்ணப்படுத்துகிறார்கள். இலெக்ட்ரிசிடியினால் பூமியில் மேல் மேலும் நீர் சுறக்கச்செய்கிறார்கள்.

x x x x x

மூங்கில்பயிர் நல்லலாபத்தை யுண்டுபண்ணக் கூடியது. அநேக விதங்களில் மூங்கில் உபயோகப்படுகிறது. பிலிப்பைன் தீவில் வீடுகளில் ஜனங்கள் மூங்கிலில் சிலாம்புகளை யுபயோகித்துத் தொப்பிகளைச் செய்கிறார்கள். ஒரு கோடிரூபாய் மதிப்புள்ள 40 லக்ஷம் தொப்பிகள் அமெரிக்காவிற்கும், பிரான்சுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தத்தொழிலை நம்முடைய தேசத்திலும் ஜனங்கள் ஓய்வு நேரங்களில் அப்பியஸித்தால் அவர்களும் அம்மாதிரியாகவே நல்ல வரும்படிகளை யடைவார்கள். காகிதம் செய்வதற்கு வேண்டிய மூங்கில் கூழ் நம்முடைய தேசத்தில் தயாரிக்கப்படக் கூடும். பர்மாவில் இவ்விதக்கூழ் தயாரிக்கப்பட்டு வெளுப்பாக்கப் பட்டுப் பார்க்கப்பட்டதில் அது வெகு நேர்த்தியாகவும் காகிதத் தொழிலுக்குத் தகுந்ததாகவு மிருந்ததென்று கண்டுபிடிக்கப் பட்டதாம்.

x x x x x

நெல்விளைச்சல் இந்தியாவில் ஏகர் ஒன்றுக்கு சராசரியில் விளைகிறதைக்காட்டிலும் இதலியில் இரண்டு பங்குகள் அதிகம் விளைகிறது. இதலியில் நாத்து நடுவதற்கு ஒரு யந்திரம் உபயோகப் படுத்தப்படுகிறது. அதையுபயோகித்து ஒரு மனிதனே அநேகம் ஏகர்களுக்கு பயிரை நட்டுவிடுகிறான். தாளை அடிப்பதற்கும் ஒரு யந்திரம் உபயோகப்படுத்தப்படுகிறது. ஒரு ஏகரின் விளைவு 2 மணிநேரத்தில் அடிபட்டு விடுகிறது.

x x x x

எலுமிச்சை, நாரத்தை, கிச்சிலி, பம்பிளிமாஸ் முதலிய பழவகைச் செடிகளுக்கு சல்லி வேர்களிருக்கின்றன. அவைகள ஜலத்தை ஏற்றுக்

கொண்டு பெரும் வேர்களில் அதைச்சேர்த்து விடுகின்றன. கால்வாய் போன்ற இப்பெருவேர்கள் ஜலத்தை மரத்தின் தண்டில்சேர்க்கின்றன. மரத்தண்டு அதனுடன் வரும் பூசார உணவு திடபதார்த்தத்தை கிரஹித்துக்கொண்டு மீந்த ஜலத்தை இலைக்கண்களில் மூலமாக நீராவியாக வெளியே விடுகிறது. இலைகள் கார் பானிக் ஆஸிடை கிரஹித்து அதிலிருந்து கார்பனைவைத்துக்கொண்டு பிராணாதாரமான ஆக்ஸிஜனை பிராணிகளின் நிமித்தம் வெளியிடுகின்றன.

காற்றடி தூசி இலைகளில் படிந்து இலைக்கண்கள் அடைபட்டுப் போகின்றன. அக்காரணத்தினால் அவைகள் வேலைசெய்யக்கூடுகிறதில்லை, செடிகளுக்கு நோய்கள் உண்டாகின்றன. மழை பெய்தபின் தூசிகள் கழுவப்பட்டு இலைக்கண்கள் தடைபடாமல் வேலை செய்வதால் தான் செடிகள் செழிப்பாய்க்காண்கின்றன; தூசி அடைந்த செடிகளில் அடிக்கடி ஸ்ப்ரேயிங்கு மிஷன் என்னும் மருந்து தெளிக்கும் யந்திரத்தினால் மருந்து கலந்த நீரைத்தெளித்தால் நோய்கள் தீரும்.

x x x x x x

எலுமிச்சை வகைராச் செடிகளுக்கு ஜலம் பாய்ச்சுவது இயற்கை விரோத வழிகளில் செய்யப்படக்கூடாது. ஆணிவேரிலேயே ஜலம் பாய்ச்சப்பட வேண்டுமே யொழிய சல்லிவேர்களில் பாய்ச்சப்படக்கூடாது சல்லிவேர்களில் நீர்பாய்ச்சப் பட்டால் அவ்வேரின் பட்டைகள் லேசானவைகளாக இருப்பதால் அவைகளில் நீர்தங்கி விடும், ஆணிவேருக்கும் தண்டிற்கும் அது சரிவர செல்லாது. நீர் சல்லிவேர்களில் தங்குவதால் வேரில் பூஞ்சாணம் உண்டாகும். இலை வெளுரல், பழுத்தல், கொம்புபடல் முதலிய நோய்கள் உண்டாகும். வேரடியில் ஜலம் தங்கக்கூடாது. மத்தியானம் பன்னிரண்டுமணி நேரத்தில் நிழல் கட்டிப்பரவினதூரமெவ்வளவோ அவ்வளவு தூரம் மரத்தைச் சுற்றி நாலு பக்கத்திலும் விருத்தாகாரமாய் ஓரடி அகலம் கால்வாய் போட்டு ஜலம்பாய்ச்சவேண்டும். செடிநிழல் கவிந்த தூரத்தில் சல்லிவேர் இருப்பதால் பாய்ந்த ஜலம் சன்னம் சன்னமாய் பெரு வேரில் சேரும், மரம்புஷ்டியாகும். சல்லிவேர் பக்கம் செல்லும் ஜலம்குறைவாக விருக்கும். சல்லி வேர் பக்கமே யன்றிபெரும் வேர் பக்கம் உரமிடக்கூடாது.

x x x x x



மூங்கிலானது 50 அல்லது 60 வருஷங்கள் ஆகியபிறகு பூக்க ஆரம்பிக்கும். பூக்கள் விதையாகி முற்றி உதிரும். உதிர்ந்தவிதைகளை அள்ளிவந்து நன்றாகக்காயப்போட்டு, பதானியில் தூற்றிப் புடைத்து மறுபடியும் காயவைக்கவேண்டும். விதை தெளிக்கிற நிலம் அதிக மணலாயும் அல்லது அதிக களியாகவு மில்லாமல் இருமண் பூமியாக விருக்கவேண்டும். அதை நன்றாய் வெட்டிப்புரட்டி அதிலுள்ள கட்டிகளை அடிக்க வேண்டும். 144 சதுர அடி நிலத்திற்குக்கலம்பிடிக்கும் கூடையால் நாலு கூடை எருபோட்டுப்புரட்டி நான்கு பாத்திகளாகக் கட்ட வேண்டும். குழிக்கு பட்டணம்படி விதைவிழுக்காடுவிதை தெளிக்கவேண்டும். பிறகு 6 மரக்கால் எருவுடன் மூன்று மரக்கால் மண்சேர்த்து விதையின்மேல் வீசிவிடவேண்டும். இதற்குப்பின்புமிளகாய்ப்பயிருக்கு மூட்டம் போடுவது போல் மூட்டம் போட்டு அதன் பேரில் உள்ளே சாரும்படி ஜலம் தெளிக்கவேண்டும். விதைவிட்ட பிறகு ஒன்று விட்டொருநாள் தண்ணீர் தெளிக்கவேண்டும். ஏழாம் நாள் முளை காணும். அன்று மாலை ஜலத்தை நன்றாய் உள்ளேசாரும்படி மூட்டத்தின் மேல் விட்டு பிறகு மூட்டத்தைப் பிரிக்கவேண்டும். பிறகு ஒன்றை விட்டு ஒன்று நாளாக மூன்று நாள் சீராய்த் தண்ணீர் தெளித்து வரவேண்டும். முளைத்த இரண்டாம் வாரத்திற்குப் பிறகுத் தண்ணீர் பாய்ச்சலாம். அணில், கன்று குருவி இவைகள் முளைகளைப்புரட்டி வேர்களைத் தின்று விடுமாகையால் முளைகள் முதிர்ந்து வரும் வரையில் பாதுகாக்கப்படவேண்டும். பயிர் காயாதபடி தண்ணீர் அடிக்கடி இறைத்து வரவேண்டும். பயிர் 8, 9 அங்குலம் வளர்வதற்கு முன்னமே பதியன் போட நிலம் தயார் செய்யவேண்டும். விதைவிட்டது ஒரு குழியானால் அதிலுள்ள கண்களைப் பேர்த்துப்பதியம்போடுவதற்கு 80 குழி நிலம் தயாரிக்கப்பட வேண்டும். அந்நிலத்தை நன்றாய் ஒரு முழ ஆழம் வெட்டி எருவிட வேணடும். காய்ந்த பிறகு சட்டையடித்து 6 அடி வாய்க்கால் கிழித்து குழிக்கு இரண்டாக பாத்திகட்டவேண்டும். பயிர் 8, 9 அங்குலம் வளர்ந்ததும் பேர்க்கவேண்டியதினத்திற்கு முந்தின தினம் தண்ணீரை குளிரப்பாய்ச்சவேண்டும். இரண்டு கண்களாய் சேர்த்து வேர் அறுமல பிடுங்கி அதிலுள்ள மண்ணைச்சேர்த்துப் பிடித்து வைத்துக்கொள்ள வேண்டும். குழிக்கு 12, 16 பதியன்படி பள்ளங்கள் தோண்டப்பட்டு அவைகளில் நீர் விடப்பட்டு வரவேண்டும் பின்பு பதியன்களை நடலாம்.

## நான்காவது சென்னை பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளின் மஹாநாடு.

நான்காவது சென்னை பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளின மஹாநாடு ஓங்கோலில் 1929ம்வருஷம் ஜனவரிமாதம் 5உயன்று கூடிற்று. ஏறக்குறைய 200 பிரதிநிதிகள் வந்திருந்தனர். ம—ா—ா—ஸ்ரீ ராவ் பஹதூர் பி. முனிசாமி நாயுடு அக்ராஸனத்தை வஹித்தார். பஞ்சாயத்து ஆபீஸர் மிஸ்டர் ஆர். டி. பால் அவர்களும், அடியில்கண்ட கனவான்களும் மஹாநாட்டிற்கு விஜயம் செய்தனர். ம-ா-ா-ஸ்ரீ குண்டூர் ஜில்லா போர்டின் பிரஸிடெண்டு ஜே. குப்பிஸாமி சவுத்திரி, பி. பெருமாள் நாயுடு எம். எல். ஏ., ஆசிரியர் என். ஜீ. ரங்கா பி லிட்., ஏ. ராஜகோபால ரெட்டி, ஓங்கோல் தாலூகா போர்டின் பிரசிடெண்டு ஜயராம ரெட்டி, ஓங்கோல் கௌரவ மாஜிஸ்டிரேட்டு வி. வி. கிருஷ்ணராவ், ரூரல் இந்தியா பத்திராதிபர் ஏ. சுவாமிநாத ஐயர் பி. ஏ. கடவுள் வாழ்த்து நடந்தவுடன் வரவேர்ப்புக்கமிட்டியின் சேர்மனாகிய ம-ா-ா-ஸ்ரீ வெங்கடசுப்பா ரெட்டிகாரு பஞ்சாயத்துகளின் பிரதிநிதிகளுக்கு உபசரணை மொழிவைச் செய்தார். இது முடிந்ததும் ம-ா-ா-ஸ்ரீ ராவ் பஹதூர் பி. முனிசாமி நாயுடு காரு அக்ராசனராக பிரேரேபிக்கப்பட்டுசடையால் ஆமோதிக்கப்பட்டு அக்ராஸனத்தை யடைந்து தெலுங்குபாஷையில் தன்னுடைய அக்ராசன மொழிவைச்செய்தார். அக்ராசனர் அவர்கள் பாரெஸ்டுகளின் நிர்வாஹநிலைமையை ஆதியோடு அந்தமாய்த் தெளிவாக விவரித்தார்.

ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் தேசவப் பிள்ளை அவர்களின் ஊழியங்களைப் புகழ்ந்து பேசினார். 1912-ம் வருஷத்திய ஹாரன் கம்மிட்டியார் காடுகளை நான்கு வகுப்புகளாகப் பிரித்தார்களென்றும், அவைகளுள் கடைசி இரண்டு வகுப்புகள் கிராமத்தாரின் உபயோகத்துக்கு அவசியமானவைகளாதலால் அவைகள் பஞ்சாயத்துகளுக்கு ஒப்பிவிக்கப்படவேண்டுமென்று கவர்மெண்டாருக்குச்சிபார்சு செய்தனரென்றும் அதன்பேரில் கவர்மெண்டார் பஞ்சாயத்துகளை உண்டாக்கி கிராமக்காடுகளை அவைகளின் நிர்வாஹத்தில் அமைக்க ஆரம்பித்தார்கள் என்றும், ஆனால் அவர்கள் அவ்வேலையில் முழுமனதுடன் வேலையைச்செய்யவேயில்லை யென்றும் ஏதோ சில பஞ்சாயத்துகளை நிர்மாணம் செய்து அவைகளை ஏதோ காரணத்தைச்சொல்லி ஒன்றொன்றாய் எடுத்துவிட ஆரம்பித்தார்கள் என்றும் கூறினார்.



1921-ம் வருஷத்தில், புதிய ஏற்பாட்டில், சட்டசபை கூடிய பிறகுதான் கிராமக்காடுகளின் விஷயமும், பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் விஷயமும் சரிவர வாதிக்கப்பட்டனவென்றும், அந்த விவாதத்தின் முடிவில் பாரெஸ்டு அட்வைசரி கம்மிட்டியொன்று ஏற்பட்டது என்றும் பாரெஸ்டு பஞ்சாயத்து ஆபீஸர் என்கிற ஒரு உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டார் என்றும், மைனர் பாரெஸ்டுகளெல்லாம் பஞ்சாயத்துகளுக்கு ஒப்பிவிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுப் பஞ்சாயத்துகளின் நிர்மாண வேலையானது கைக்கொள்ளப்பட்டது என்றும் பாரெஸ்டுகள் பிரொவின்ஷியல் என்றும் லோகலென்றும், இருவகைகளாகப் பிறிக்கப்பட்டு லோகல் காடுகள் பஞ்சாயத்துகளின் நிர்வாகத்திற்கு ஒப்பிவிக்கப்பட்டன வென்றும் பஞ்சாயத்து ஸ்பெஷல் ஸ்டாப்பானது அதிகப்படுத்தப்பட்டதென்றும் மொழிந்தார். இன்னும் தற்பொழுதில் 1100 பாரெஸ்டு பஞ்சாயத்துகள் வேலை செய்கின்றன வென்றும், 5000 சதுர மைல் விஸ்தீர்ணத்தை அவைகள் மொத்தத்தில் வகிக்கின்றன வென்றும் பஞ்சாயத்துகள் இவ்விதமாக பிரதி வருஷமும் ஒன்று கூடி மஹாநாட்டை நடத்தி வருவது பாரெஸ்டுப் பஞ்சாயத்து இயக்கத்தையே ஒங்கச் செய்யு மென்பதில் சந்தேகமில்லையென்றும், கூறி அடியில் கண்ட சில விஷயங்களைக் குறிப்பிட்டு அவைகளில் தீர்மானங்களை கைக்கொள்ளும்படி சபைக்கு சிபார்சு செய்தார்.

புரொவின்ஷியல் என்று பகுக்கப்பட்ட காடுகள் கிராமதார்களின் உபயோகத்திற்கு வேண்டிய காடுகளானையால் அவைகளும் பஞ்சாயத்துகளுக்கு ஒப்பிவிக்கப்படவேண்டும். பஞ்சாயத்துக் காடுகளின் குத்தகைத் தொகைகள் உற்பத்திக்கேற்றபடியில்லாமல் பஞ்சாயத்துகளின் சக்திக்கு மேல்பட்டவைகளாக யிருக்கிறபடியால் அவைகள் குறைக்கப்பட வேண்டும். கவர்மெண்டார் இது விஷயமாய் ஒரு கமிட்டியை ஏற்படுத்தவேண்டும். காடுகளில் பஞ்சாயத்துகள் உண்டாக்கிய ஒழுங்குகளினால் ஏற்படும் அதிக லாபங்களை யுத்தேசித்து கவர்மெண்டார் குத்தகைத் தொகைகளை உயர்த்தக்கூடாது. பஞ்சாயத்துகளின் பிரதேசங்களில் நடந்த குற்றங்களின் நிமித்தம் விதிக்கப்பட்ட கம்பவுண்டிங்கு பீஸுகள் அந்தந்தப் பஞ்சாயத்துகளுக்கே கொடுக்கப்பட வேண்டுமே யொழிய கவர்மெண்... தொகைகளை அடையக்கூடாது. பஞ்சாயத்துக்காடுகளி...

கம்பவுண்டு செய்ய அதிகாரமுள்ள பஞ்சாயத்துகளென்றும், அவ்வதிகாரத்தை வஹிக்காத பஞ்சாத்துகள் என்றும் இருவகைப் பஞ்சாயத்துகள் கூடாது. கிராமங்களிலுள்ள மேய்க்கால்கள் சாகுபடிக்காகவோ, அல்லது வேறெவ்வித உபயோகத்திற்காகவோ தர்காஸ்தில் கொடுக்கப்படக்கூடாது. பாரெஸ்டு பஞ்சாயத்துகள் ஜில்லா கலெக்டர்களின் அதிகாரத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றன.

ஜில்லா கலெக்டர்கள் கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு அவ்வதிகாரத்தைக் கொடுக்கிறபடியால் பஞ்சாயத்துகள் தக்கபடி முயர்ச்சி செய்யக் கூடாதபடி ஏற்பட்டுவிடும். பஞ்சாயத்துத் தேறுதல்களிலும் கீழ் உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்படுவார்கள். பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் கிராமப்பஞ்சாயத்துகளைப் போலவே சட்ட பூர்வமான அந்தஸ்தை வகிக்க வேண்டும். கவர்மெண்டாருக்கு தற்போதில் ஸ்பெஷல் ஸ்டாப் சிலவு போக 1,10,000 ரூபாய் லாபம் வருகிறது. தாங்களே இக்காடுகளை நிர்வகித்த காலத்தில் அவர்கள் நஷ்டத்தைத்தான் அடைந்து வந்தார்கள். இப்படி பஞ்சாயத்துக்களிலிருந்து லாபங்களை யடைவது அவர்களுக்கு தர்மமா? குத்தகைத்துகைகளை அவர்கள் குறைக்கக்கூடாதா? பணமில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற பஞ்சாயத்துகளுக்குக் காடுகளின் அபிவிருத்தி முயற்சிகளின் பொருட்டு பண ஒத்தாசைகளை அவர்கள் செய்யக்கூடாதா? கவர்மெண்டார் மூன்று வருஷங்களுக் கொருவிசை குத்தகைப்பணங்களை உயர்த்துகிற வழக்கத்தை விட்டு விட வேண்டும். சிறிய பஞ்சாயத்துகள் இணைக்கப்பட வேண்டும். ஜில்லாச் சங்கங்களும் மாகாணச்சங்கமும் ஏற்பட்டு பஞ்சாயத்துகளை மேல்பார்வையிட்டு கவர்மெண்டாருக்கு அப்போதைக்கப்போது குறைகளை எடுத்துக்காட்டி ஒழுங்கு செய்யும்படி எழுதிக்கொள்ள வேண்டும். உடனே ஒரு மாகாணச்சங்கம் ஏற்பட்டு வருஷம் முழுவதும் வேலை செய்ய வேண்டுமென்று கூறி, தன்னை அக்ராஸன அந்தஸ்திற்கு நியமித்ததைப்பற்றி மகாநாட்டிற்கு வந்தனத்தையளித்து உபந்யாஸத்தை முடிவு செய்தார்.

### தீர்மானங்கள்.

மகாநாட்டில் அடியில் விவரிக்கப்பட்ட தீர்மானங்கள் கைகொள்ளப்பட்டன:—

(1) மகாநாடு நமது சக்கிரவர்த்தியவர்கள் உடம்பு சௌஸ்தமில்லாமலிருப்பதைப்பற்றி மிக்க கவலையைக் கொண்டிருக்கிறது.



அவர்கள் சீக்கிரத்தில் முன் போல் சுகஸ்திதியை யடையவேண்டும் என்று கடவுளை வணங்குகிறது.

(2) பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் அபிவிருத்தியின் பொருட்டு பாடுபட்ட நமது அரிய பெரிய தேசாபிமானி பனகல் ராஜா அவர்களின் மரணத்தினால் நம்முடைய மகாணத்திற்கே பலம் குறைந்தது. அதைப்பற்றி நாம் ரொம்பவும் விசனப்படுகிறோம்.

(3) பாரெஸ்டு பஞ்சாயத்து அஸ்ஸோஸியேஷன் என்று ஒரு மாகாணச்சங்கம் ஏற்படவேண்டும். ஒவ்வொரு பாரெஸ்டு பஞ்சாயத்தும் வருடச்சந்தாவாகிய 2 ரூபாயைக்கொடுத்து அதில் மெம்பராக வேண்டும். பஞ்சாயத்துகளைத் தவிர இதரத் தனிநபர்களும் வருடச்சந்தாவாகிய 5 ரூபாயைச் செலுத்தி மெம்பர்களாகச் சேரலாம்.

சங்கத்தின் வேலை ஒரு பிரஸிடெண்டு, 9 வைஸ் பிரஸிடெண்டுகள், 2 செக்ரிடரிகள், 21 இதர மெம்பர்கள் சேர்ந்த ஒரு நிர்வாஹ சபையால் நடத்தப்பட வேண்டும். இவர்கள் எல்லோரும் வருஷா வருஷம் வருஷாந்தர மஹா நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு அடுத்த வருஷ மஹாநாடு வரையில் உத்தியோகங்களை வஹிக்க வேண்டும்.

(4) சங்கத்தின் நோக்கங்கள் பஞ்சாயத்துகளைப் பாதுகாப்பதும் அவைகள் மேன்மையை அடையவேண்டிய வழிகளில் முயற்சி செய்வதும், அவைகளின் அந்தஸ்தையும் அதிகாரங்களையும் உயர்த்துவதும், மஹாநாட்டின் தீர்மானங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதும், ஜில்லா மகாநாடுகளையும், மாகாண மகாநாடுகளை நடத்துவதுமாக விருக்கவேண்டும்.

(5) பாரெஸ்டு பஞ்சாயத்துகள் சட்டபூர்வமான அந்தஸ்தை அடைய வேண்டும்.

(6) எல்லாப் பாரெஸ்டு பஞ்சாயத்துகளும் குற்றங்களை கம்பவுண்டு செய்ய அதிகாரத்தை கவர்மெண்டார் கொடுக்க வேண்டுமென்று மகாநாடு பிரார்த்திக்கிறது.

(7) பஞ்சாயத்துகளின் எல்லைகளுள் நடந்த குற்றங்களின் நிமித்தம் விதிக்கப்படும் கம்பவுண்டு பீஸுகளும் அக்குற்றங்களைச் சம்பந்தப் பட்ட பஞ்சாயத்துக் காட்டு மாசூல்களும் எந்தப் பஞ்சாயத்துகளின் எல்லைகளுக்குள் குற்றங்கள் நடந்தனவோ அந்தந்த பஞ்

சாயத்துகளுக்கே சொந்தமாக்கப்பட வேண்டுமேயொழிய அவைகளை கவர்மெண்டாரடையக்கூடாது

(8) கவர்மெண்டார் மாகாணத்துக் காடுகளை மறுபடியும் தரம் பிறிக்கவேண்டும்; நாலாவது வகுப்பில் அடங்கிய புரொமின்ஷியல் என்று பகுக்கப்பட்ட காடுகள் பஞ்சாயத்துகளின் நிர்வாஹத்திற்கு மாற்றப்படவேண்டும்.

(9) பஞ்சாயத்துகள் காடுகளின் நிமித்தம் கவர்மெண்டிற்குச் செலுத்தும் குத்தகைப்பணங்கள் அவைகள் செலுத்தக்கூடிய சக்திக்கு மேல்பட்டவைகளாக விருக்கின்றன. ஆகவே, கவர்மெண்டார் அவைகளைக் குறைக்க வேண்டும். மேலும் அவர்கள் பஞ்சாயத்துகளின் உழைப்பால் ஏற்படும் அதிக வரும்படியை உத்தேசித்து மேல் கொண்ட குத்தகை பணத்தை விதிக்கக்கூடாது.

(10) அபிவிருத்தி, கல்வி இவ்விலாகாக்களின் மந்திரிகளையும், பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜனரலையும், ஜில்லாபோர்டுகள், தாலுக்கா போர்டுகள் இவைகளின் பிரஸிடெண்டுகளையும் ரூரல் இந்தியா பத்திரிகையை ஆதரிக்கும்படி மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(11) எந்த வருஷங்களில் பஞ்சாயத்துகள் அவைகளின் காடுகளிலிருந்து சிலவு போக சரியானபடி வரும்படியை யடைகிறதில்லையோ அவ்வருஷங்களில் குத்தகை பணம் குறைக்கப்படவேண்டும்.

(12) முந்திய வருஷத்திய மகாநாட்டின் 5-வது தீர்மானத்தை இம்மகாநாடு வர்புருத்துகிறது.

(13) பஞ்சாயத்துகளால் அதிகப்பட்ட கால் நடைகளுக்கு வசூலிக்கப்படும் மேய்ச்சல் கட்டணங்கள் பஞ்சாயத்துகளுக்கே சேர வேண்டுமே யொழிய அவைகளை கவர்மெண்டார் அடையக்கூடாது. பஞ்சாயத்துகளடைந்தால் காடுகளின் அபிவிருத்திச் சிலவுகளுக்கு அவை உபயோகப்படக்கூடும்.

(14) கவர்மெண்டார், கோஆபரேடிவ் வழிகளில் உதவி செய்கிறது போலவே, பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியனுக்கும் கிராமாந்தரங்களில் பிரச்சாரவேலைக்காக பண உதவியைச் செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது.



(15) பஞ்சாயத்துகளின் எல்லைகளிலுள்ளப் பிரதேசங்களில் சுக்கான் கல் பாரைக்கல், செம்மண், கிரேவல் முதலியவற்றை வெட்டி கொண்டு போவதற்காகவும், தென்னை, பனை, ஈச்சை வகைரா மரங்களிலிருந்து கள்ளை இறக்குவதற்காகவும் பெர்மிட்டுகள் பஞ்சாயத்துகளாலேயே கொடுக்கப்பட வேண்டுமென்றும் தாசில்தார் முதலியவர்களால் கொடுக்கப்படக் கூடாது என்றும் கவர்மெண்டார் உத்திரவிட வேண்டும்.

(16) கூப்கள் கிராமங்களை யொட்டி யிருப்பது கிராம முயர்ச்சிகளுக்கு பலவிதங்களில் கஷ்டங்களை விளைக்கிறபடியால் கவர்மெண்டார் இனி கூப்புகளை வைப்பதில் கிராமக்குடிகளின் சம்மதத்தை அநுஸரித்தே நடக்கவேண்டுமென்று மகாநாடு வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறது.

(17) குண்டூர் ஜில்லா, வினுகொண்டா தாலூகாவில் நீ 76 பஞ்சாயத்தில் செம்மரி ஆட்டிற்குக் கட்டணம் 2 அணாவிலிருந்து 4 அணாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது கிரமமானதல்ல.

(18) கவர்மெண்டார் நரஸராவ்பேட்டை பல்நாட் தாலூகாக்களில் சிலபஞ்சாயத்துகளை எடுத்துவிட்டுக் காடுகளை தர்காஸதில் கொடுக்க எத்தனித்திருப்பதாகத் தெரியவருகிறது. அப்படிச் செய்யக்கூடாதென்றும் பஞ்சாயத்துகள் முன்போலிருக்க வேண்டுமென்றும் மகாநாடு வணக்கமாய்க் கேட்டுக் கொள்கிறது.

(19) பஞ்சாயத்துக்களை இணைப்பதற்காகவும் அவைகளின் விஸ்தீரணங்களை குறைப்பதற்காகவும் உத்திரவிடுவதற்குமுன் கவர்மெண்டார் பஞ்சாயத்துகளுக்கு அறிக்கையிட்டு அவைகளின் அபிப்பிராயங்களைப் பெறவேண்டும்.

(20) ம-ா-ா-ஸ்ரீ ஏ. சுவாமிநாத ஐயர் பி. ஏ (ரிடையர்டு டிப்டி கலெக்டர்) அவர்கள் ரூரல் இந்தியா பத்திரிகைக்கு ஆசிரியராக விருந்து கொண்டு கிராம ஜனங்களின் முன்னேற்றத்தின் பொருட்டுப் பாடுபட்டு வருவதைப்பற்றி இம்மகாநாடு அவருக்கு நன்றி கூறுகிறது.

# வர்த்தமானக்குறிப்பு.

பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கம் நன்றாய் ஓங்கவேண்டுமென்கிற நோக்கத்தைக் கொண்டும் பஞ்சாயத்துகளின் உரிமைகளுக்கு யாதொரு கெடுதியும் ஏற்படாமல் பாது காப்பதற்கும், பஞ்

சாயத்துகளோடும் கவர்மெண்டோடும் கலந்து வேலைசெய்து கொண்டு தளராமல் பிரச்சாரங்களைச் செய்யவேண்டிய நிமித்தம் ஒரு உள்கம்மிட்டியை யுடைய மாஹாணப் பாரெஸ்டுப் பஞ்சாயத்து ஸங்கமொன்று ஏற்படுத்தப் படவேண்டு மென்றும் மகாநாட்டில் தீர்மானிக்கப் பட்டது.

வெகு பஞ்சாயத்தார்கள் பஞ்சாயத்துக் காடுகளின் நிர்வாஹத்தில் உள்ள கஷ்டங்களையும் குறைகளையும் பற்றி மனுக்களை மகாநாட்டில் கொடுத்தார்கள். ரெவினியூ போர்டாரின் சார்பில் பாரெஸ்டுப்பஞ்சாயத்து ஆபிஸராகிய மிஸ்டர் R. D. பால், எம். ஏ. அவர்கள் மகாநாட்டில் ஆஜராகி யிருந்தார். அவர் மேற் கூறிய குறைப் பத்திரங்களை வாங்கிக் கொண்டு, ரெவினியூ போர்டாரிடம் அவைகளை ஆலோசனை நிமித்தமாக அநுப்பப் போகிறதாகக் கூறினர்.

பாரெஸ்டு பஞ்சாயத்து சங்கத்தின் நிர்வாக சபைக்கு 1929-ம் வருஷத்திற்காக அடியில் கண்ட கனவான்கள் அங்கத்தினர்களாக நியமிக்கப் பட்டார்கள்:—

1 ம—ா—ா—ஸ்ரீ ராவ்பகதூர் பி. முனுசாமி நாயடுகாரு, பி ஏ., பி எல்., எம். எல்.ஸீ அக்ராஸனர்.

உதவி அக்ராஸனர்கள்.

2 ... ... கே. கோடி ரெட்டிகாரு பார். அட். லா., எம். எல்., ஸி. கடப்பை.

3 ... ... ஏ. ராமஸ்வாமி முதலியார் அவர்கள் பி. ஏ. பி. எல்., சென்னைக்கார்பொரேஷனின் அக்ராஸனர்.

4 ... ... ஜே. குப்புஸாமி சவுத்திரிகாரு எம். எல். ஸி குண்டூர்ஜில்லா போர்டு அக்ராஸனர்.

5 ... ... பி, ராமச்சந்திர ரெட்டிகாரு பி. ஏ. எம். எல் ஸி. நெல்லூர்.

6 ... ... ஏ. சுவாமிநாத ஐயர் அவர்கள் பி. ஏ. ரிடையர்டு டிப்டி கலெக்டர், ரூரல்இந்தியா பத்திராசிரியர் மைலாபூர், சென்னை.

7 ... ... பெருமாள் நாயடுகாரு பி. ஏ., எம். எல். ஏ நெல்லூர்.



8 ம—ா—ா—ஸ்ரீ திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் எம். எல். ஸீ., திருநெல்வேலி ஜில்லா போர்டின் அக்ராஸனர்.

9 ... ... எஸ். வெங்கிடசுப்பா ரெட்டிகாரு, சீம குர்தி பாரெஸ்டு பஞ்சாயத்து பிரஸிடெண்டு, குண்டூர் ஜில்லா.

கார்யதரிசிகள்

1 ... ... ஆசிரியர். என். ஜீ. ரங்கநாயகலு, பி. லிட்டு (ஆக்ஸன்) சென்னை பச்சையப்ப முதலியார் காலேஜில் ஆசிரியர்.

2 ... ... ஏ. ராஜகோபால ரெட்டிகாரு பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டின் பிரஸிடெண்டு, மயிலாப்பூர், சென்னை.

மெம்பர்கள்

1 ... ... சந்தையகாரு, கெண்டபில்லி, குண்டூர் ஜில்லா,

2 ... ... டி. எஸ். கொம்பா படையாச்சி அவர்கள் அயன் தத்தனூர், திருச்சிராப்பள்ளி ஜில்லா.

3 ... ... ஸி. பூர்ணச்சந்திர ராவ்காரு, சிலகல்லு, கிருஷ்ணா ஜில்லா.

4 ... ... பி. கேசவ ஐயர் அவர்கள், பொரசக்குரிச்சி, தென் ஆற்காடு ஜில்லா

5 ... ... என். ஆர். சுப்பராயலு ரெட்டியார் அவர்கள், மணக்கொல்லை தென் ஆர்காடு ஜில்லா.

6 ... ... ஆர் துரசாமி கவண்டர் அவர்கள் வட ஆற்காடு ஜில்லா

7 ... ... டி. கோவிந்தசாமி நாயகோரு வட ஆற்காடு ஜில்லா.

8 ... ... பெத்த ஸித்தம நாயடுகாரு, பந்தர்வபல்லி. சித்தூர் ஜில்லா,

9 ... ... வெங்கிடஸாமி ரெட்டிகாரு, நாகிரெட்டிபல்லி, அநந்தபூர் ஜில்லா.

10 ... ... கேசவ ரெட்டிகாரு, ராமாபுரம், அநந்தபூர் ஜில்லா.

11 ... ... லிங்கா ரெட்டிகாரு, தெலிகி, கடப்பை ஜில்லா.

12 ... ... ஹநுமந்த ராவ்காரு, கர்நூல் ஜில்லா.

13 ... ... ஜீ. பாலகிருஷ்ண ரெட்டிகாரு, ஸங்கம், நெல்லூர் ஜில்லா.

14 ... ... கிருஷ்மாச்சார்லு காரு, பல்லாரி.

15 ... ... பெய்தா பாலசுப்ரமணிய ரெட்டிகாரு, ஸந்த வேலூர் செங்கற்பட் ஜில்லா.

16 ... ... பி. சின்னசாமி ரெட்டியார் அவர்கள், பள்ளிக்குப்பம் செங்கற்பட் ஜில்லா.

17 ... ... வெங்கடப்பா ரெட்டிகாரு, குண்டூர் ஜில்லா.

## மதருஸ் பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் லிமிடெட்.

கீழ்கண்ட பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் மதருஸ் பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியனில் பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த ஜனவரிமீ முடிவுவரை அப்படி பங்குகள் எடுத்துக் கொண்டவர்களின் ஸங்கியை 355. பங்கின் பொருப்பு ஒரே ரூபாய்தான். கொக்கப்பட்ட மொத்த பங்குகள் 605.

இந்த பத்திரிகையில் ஒவ்வொரு மாதமும் இப்படிப்பட்ட பங்கு தாரர்களுடைய பெயர், விலாசம், முதலிய விவரங்கள் பிரசுரிக்கப்படும்.

| நெ. | பெயர் | பஞ்சாயத்து | ஜில்லா | ஷேர் |
|---|---|---|---|---|
| | | முன்ஸஞ்சிகைபடி மொத்தம் 196. | | |
| 131 | குப்பு கவுண்டர் | மேட்டுபாளையம் | வ. ஆற்காடு | 1 |
| 132 | ராஜா கவுண்டர் | ,, | ,, | 1 |
| 133 | S. T. பழனியாண்டி கவுண்டர் | வெள்ளகால்பட்டி | திருச்சி | 1 |
| 134 | M. C. தேவராயபிள்ளை | ,, | ,, | 1 |
| 135 | W. மாச்சி ரெட்டி | ,, | ,, | 1 |
| 136 | T. முத்து வீரம ரெட்டியார் | ,, | ,, | 1 |
| 137 | V. P. வைத்திலிங்கபிள்ளை | ,, | ,, | 1 |
| 138 | P சிதம்பர கவுண்டர் | ,, | ,, | 1 |
| 139 | கிருஷ்ணசாரி | சோராணூர் | பல்லாரி | 1 |
| 140 | வோரணகல்லு அடிங்கம்மா | ,, | ,, | 1 |
| 141 | பணகார முகப்பா | ,, | ,, | 1 |
| 142 | பங்கி சித்தப்பா | ,, | ,, | 1 |
| 143 | கோடி நாகப்பா | ,, | ,, | 1 |
| 144 | ஸலவாதி கிட்ட ஹனுமப்பா | ,, | ,, | 1 |
| 145 | சிங்காரவேலு முதலியார் | கண்டாடு | தெ. ஆற்காடு | 1 |
| 146 | K அருணசல முதலியார் | ,, | ,, | 1 |
| 147 | V. குப்புசாமி முதலியார் | ,, | ,, | 1 |
| 148 | நடேச கவுண்டர் | ,, | ,, | 1 |
| 149 | அருணசல கவுண்டர் | ,, | ,, | 1 |
| 150 | M. கலிங்க நர்தனன் பிள்ளை | பெரியாமூர் | தெ. ஆற்காடு | 1 |
| 151 | S.R. கோதண்டராமய்யர் | ,, | ,, | 1 |
| 152 | முனிசாமி கவுண்டர் | ,, | ,, | 1 |
| 153 | K. சங்கர ரெட்டி. | ,, | ,, | 1 |
| 154 | கோவிந்தசாமி பிள்ளை | ,, | ,, | 1 |
| 155 | M.M. ஜயம் பெருமாள் படையாச்சி | | ,, | 1 |
| 156 | C. முனிசாமி நாயுடு | சிந்தாமணி | செங்கல்பட்டு | 1 |
| 157 | வெங்கிடராமய்யர் | ,, | ,, | 1 |
| 158 | தேவராஜலு ரெட்டி | ,, | ,, | 1 |
| 159 | M K. குப்புசாமி ரெட்டி | ,, | ,, | 1 |
| 160 | ராமதாஸ் ரெட்டியார் | ,, | ,, | 1 |
| 161 | சின்னசாமி பிள்ளை | ,, | ,, | 1 |
| 162 | சுப்பராய ரெட்டியார் | ,, | ,, | 1 |
| 163 | O. பெருமாள் ரெட்டியார் | ,, | ,, | 1 |
| 164 | M. K. ரங்கசாமி அய்யங்கார் | ,, | ,, | 1 |
| 165 | சட்டி முத்து உடையார் | வரன ஜரம் | தெ. ஆற்காடு | 1 |
| 166 | சின்னசாமி உடையார் | ,, | ,, | 1 |
| 167 | N. முத்துசாமி உடையார் | ,, | ,, | 1 |
| 168 | தாண்ட முத்து உடையார் | ,, | ,, | 1 |
| 169 | கணபதி உடையார் | ,, | ,, | 1 |
| 170 | பெரியண்ண கவுண்டர் | மேல்புணதியூர் | வ. ஆற்காடு | 2 |
| 171 | K. பாலகிருஷ்ண ரெட்டி | ,, | ,, | 2 |
| 172 | C. ராம கவுண்டர் | ,, | ,, | 2 |
| 173 | N. ராஜா ரெட்டியார் | ,, | ,, | 2 |
| 174 | அப்பாபி ரெட்டியார் | ,, | ,, | 2 |
| 175 | A கோபால கவுண்டர் | ,, | ,, | 2 |
| 176 | சீதாராம ரெட்டியார் | ,, | ,, | 2 |
| 177 | குமாரசாமி உடையார் | தேவிபந்தல் | தெ. ஆற்காடு | 1 |
| 178 | தேவராஜ உடையார் | ,, | ,, | 1 |
| 179 | ரங்கசாமி உடையார் | ,, | , | 1 |
| 180 | முத்துகெசவு உடையார், ஆதிமூலம் பிள்ளை,, | | | 1 |

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

# அசல்

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.



அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

# ஷண்முகம் பட்டணம்பொடி

**ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்.**

**போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்**

சுமார் 80 வருஷங்களுக்குமுன் யதாரில் முதல் தோன்றி, உலகமெங்கும் புகழ்பெற்ற அசல் ஷண்முகம் மூக்குத்தூள் என்கிற பட்டணம் பொடியை உபயோகிப்பவர்களுக்கு ஆனந்தத்தையும், சுறுசுறுப்பும், கொடுத்து வருவது அசல் ஷண்முகப் பொடியே.

80 வருஷகாலமாக சென்னையிலே, சிறப்பு வாய்ந்த ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள்பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோரும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும்நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே இமையப்பெற்று, நமது ஏஜெண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகிவருவது எது? எங்கள் **அசல் ஷண்முகம்பட்டணம்பொடியே.** இனிமேலாவது ஏமார்ந்துபோகாமல் எங்கள் அசல் ஷண்முகம்பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

அசல் ஷண்முகம் பொடி விலை ஜாபிதா.

முதல்தரம் ஒரு வீசை ரூ. 4 4 0. | இரண்டாந்தரம் ரூ. 3 4 0

டாக்டர். ஆர் கே. பரிமள மூக்குத்தூள்.

இதனால் ஜலதோஷம், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப் படுமென்பதில் சந்தேகமே கிடையாது. சாதா மூக்குத்தூளுடன் இந்தத்தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய்விடும்.

| | விலை. | தபால்கூலி. | பாக்கிங். | தொகை. |
|---|---|---|---|---|
| 3 புட்டி | 0 9 0 | 0 4 0 | 0 1 0 | 0 14 0 |
| 6 புட்டி | 1 2 0 | 0 5 0 | 0 1 0 | 1 8 0 |
| 12 புட்டி | 2 4 0 | 0 8 0 | 0 1 0 | 2 13 0 |

இனாம்! ரப்பர் முத்திரை. இனாம்!!

நமது சக்ரவர்த்தி அவர்களால் நன்கு மதிக்கப் பெற்ற 14 காரட் கோல்ட் நிப்பு பதித்த பவுண்டன் பேனா வெகு நாளைக்கு உழைக்கும், எல்லா காகிதத்திலும் நன்றாக எழுதும்.




இந்த பேனா வாங்கு வோருக்கு அவர்களுடைய (முழு) விலாசத்துடன் (ரப்பர் முத்திரை) (இனாமாய்) செய்தனுப்பப்படும்.

பேனா 1-க்கு ரூ 2—10—0 கேட்லாக் இனாம்.

ஜீ. எஸ், அண்டு கோ.

8, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, (மதராஸ்.)

---

# இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும்முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு, கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சிராப்பள்ளி.

---

குறைந்த விலை! நிறைந்த பலன்!

# அத்புத ஆருடம்

5 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1க்கு 4அணா அதிகம் வி. பி. வேறு. கடிதம் எழுதும் நேரம் அனுப்பவும்.

ஸ்ரீ சக்தி தாயித்து:- இதனால் வியாபாரம், உத்தியோகம், பயிர்த் தொழில் விருத்தியாகும். ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் சங்கா தோஷங்களும், கிரக தோஷங்களும் அடியோடு நிவர்த்தியாகும் சகல நன்மைகளும் உண்டாகும். விலை ரூபா 4 வி. பி. வேறு. நமது பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும் வெளிநாடுகளுக்கு எல்லாம் 2 பங்கு சார்ஜ் முன்பணம் அனுப்பவும்.

பலாசூர் N. ராமநாத சாஸ்திரியவர்

அடையாறு லைப்ரேரி பண்டிதர்,

மைலாப்பூர்—சென்னை

1926ஸ்த்திய இரண்டாவது பாரெஸ்டு பஞ்சாயத்து மாகாண கான்பரன்ஸுக்காகவும் அதுஸம்பந்தமாக பிற்பாடு செய்த சிலவுகளையும் விவரிக்கும்

## வரவு சிலவு ஜாபிதா

(1) வரவுவிவரம்

| | |
|---|---|
| 1. பாரெஸ்டு பஞ்சாயத்துக்களிலிருந்து சந்தா வசூல் | ரூ 955-3-6 |
| 2. கான்பரன்ஸில் மீந்த மளிகை ஸாமான்களின் கிரயம் | ரூ 12-5-0 |
| ஆ. | ரூ **967-8-6** |

(2) சிலவுவிவரம்:—

| | |
|---|---|
| 1. அச்சுக்கூலி | ரூ 171 13 6 |
| 2. படிச்சிலவு | 188—6—10 |
| 3. மளிகை சாமான்கள் | 410—14—9 |
| 4. தபாற் சிலவு | 39—10—6 |
| 5. காகிதம் முதலியன, | 12— 0—3 |
| 6. விளக்கு வைக்க எண்ணை | 7— 8—0 |
| 7. மாலைகள் புஷ்பம். | 25— 0—0 |
| 8. வீட்டு வாடகை | 42— 0—0 |
| 9. புகைப்படம் (Photoes) | 46—12—0 |
| 10. ஹரிக்கன் விளக்குகள் முதலியன | 10— 1—3 |
| 11. கூலி வகையறா | 8—9—10 |
| 12. கை இருப்பு | 4—11—7 |
| ஆ. | ரூ **967-8-6** |

1928 ஸ்த்திய மூன்றாவது பாரெஸ்டு பஞ்சாயத்து மாகாண கான்பரன்ஸுக்காவும் அதுஸம்பந்தமாக பிற்பாடு செய்த சிலவுகளையும் விவரிக்கும்

## வரவு சிலவு ஜாபிதா:

(1) வரவுவிவரம்

| | |
|---|---|
| 1. பஞ்சாயத்துகளிலிருந்து சந்தாவரவு | ரூ 726-15-0 |
| 2. மிகுதியான ஸாமான்களின் கிரயம் | ரூ 32-10-6 |
| 3. கான்பரன்ஸ் விவரபுஸ்தக விற்பனை | ரூ 1-8-0 |
| ஆ. | **761-1-6** |

(2) சிலவுவிவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. மளிகை சாமான்கள் | 350 | 4 | 0 |
| 2. அச்சுக்கூலி | 47 | 0 | 0 |
| 3. காகிதம் முதலியன | 28 | 14 | 6 |
| 4. படிச்சிலவு | 65 | 8 | 9 |
| 5. தபால் சிலவு | 61 | 12 | 6 |
| 6. வீட்டு வாடகை | 50 | 9 | 6 |
| 7. குமஸ்தாக்கள் சிலவு | 20 | 0 | 0 |
| 8. மாலைகள் முதலியன | 15 | 0 | 0 |
| 9. படங்கள், போட்டோக்கள் | 1 | 1 | 0 |
| 10. விளக்குகள் | 29 | 6 | 3 |
| 11. ஜவான்கள், முதலிய சிலவுகள் | 9 | 9 | 11 |
| 12. கையில் இருப்பு | 81 | 15 | 1 |
| ஆ. ரூ | **761-1-6** | | |

193379

# அறிக்கை

"ரூரல் இந்தியா" சந்தாதொகைகளும் அட்வர்டிஸ்மெண்டு கட்டணங்களும் பாரெஸ்ட்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்கு சேர்ந்தபணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டராகி விட்டபடியால் கணக்கு ஒன்றாகவே இருக்க வேண்டியிருப்பதினாலும் இனி ஷேர் தொகைகள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. ருஜகோபால ரெட்டி.

பிரஸிடெண்டு, பாரெஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு
முகாம் :—பாலவாக்கம்
ஊத்துகோட்டை போஸ்ட்டு
செங்கல்பட்டு ஜில்லா."

---


## டாக்டர் 'ஜீ' பீ. என்பவரின் சுகந்த மூக்குத்தூள்

இதில் விலையுயர்ந்த பல வாசனைச் சரக்குகள் சேர்ந்துள்ளன

இதை உபயோகித்தால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. கெடுதியென்பது யாதொன்றும் நேரவே நேராது. சாதா மூக்குத்தூளை 10, 15 தடவை உபயோகிப்பதைவிட இத்தூளை ஒரே ஒரு தடவை உபயோகிக்கலாம். காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால், தூள் முழுவதும் சுகந்தமாய் விடுவதுமல்லாமல், தன் சுபாவ குணமும்காரமும் மாறவே மாறாது. இதைப் பற்றி அநேக நற்சாட்சி பத்திரங்களும் தங்கப் பதக்க பரிசுகளும் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும்.



REGISTERED TRADE MARK

புட்டி ஒன்றுக்கு விலை அணா 4

புலி மார்க்

முதல்தரமான சாதா பட்டணம் பொடியும் விற்கப்படும்.

தருபசவா அண்டு கம்பெனி, லிமிடெட்

தபால் பெட்டி நெ. 510 | பார்க் டவுன்,
விலாசம் "மெடிகேடெட்" | சென்னை.

Imitations merely advertise the original

# AMRUTANJAN

The dictionary word for The Pain Balm for 40 years

## A MAGIC CURE FOR

RHEUMATISM
LUMBAGO
HEADACHE
STIFF JOINTS




SPRAINS
COUGH, COLD
NEURALGIA
SWELLINGS

## and All Aches & Pains

It is easier for a camel to go through the eye of a needle than for aches and pains to enter the kingdom of Amrutanjan!!!

**Price 10 As a pot.**

**Amrutanjan Depot**

BOMBAY & MADRAS

Published by MR. A. RAJAGOPALA REDDI, President, Forest Panchayatdars' Union Ltd., Madras. *Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS CHINGLEPUT*